செ.வெ.எண்.04 நாள்: 03.11.2020

# தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் கந்த சஷ்டி திருவிழா முன்னேற்பாடு பணிகள் மற்றும் கோவிட் 19 சிறப்பு ஏற்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு செய்தார்

---

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் கந்த சஷ்டி திருவிழா முன்னேற்பாடு பணிகள் மற்றும் கோவிட் 19 சிறப்பு ஏற்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (03.11.2020) நேரில் ஆய்வு செய்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் மிகப்பெரிய திருவிழாவான கந்த சஷ்டி திருவிழா, சூரசம்ஹார நிகழ்ச்சி இம்மாதம் 15ம் தேதி துவங்கி 26ம் தேதி வரை 12 நாட்கள் நடைபெற உள்ளது. நவம்பர் 20ம் தேதி சூரசம்ஹார நிகழ்ச்சியும், 21ம் தேதி திருக்கல்யாண நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது. இந்த முறை கோவிட் கட்டுப்பாடுகள் ஊரடங்கு நவம்பர் 30 தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. பல்வேறு தளர்வுகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

இன்றைய தினம் நான், காவல்துறை அதிகாரிகள் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் நிகழ்ச்சிக்கு எந்த மாதிரியான ஏற்பாடுகள் செய்ய வேண்டும், வரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் எந்த மாதிரியான ஏற்பாடுகள் பண்ண வேண்டும், உள்ளே தரிசனத்திற்கு எத்தனை பக்தர்களுக்கு அனுமதிக்க வேண்டும், சமூக இடைவெளி, மாஸ்க் போடுதல் மற்றும் விழாவிற்கான பல்வேறு ஏற்பாடுகள் குறித்து இன்று ஆய்வு செய்யப்பட்டது. தற்போது கோவிட் 19 தொடர்பான தளர்வுகள் பக்தர்களிடம் பின்பற்றி வருவது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இதுதொடர்பாக வரும் 5ம் தேதி தனி ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. அதில் ஆட்சித்தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்தாய்வு செய்து ஆலோசனை கூட்டத்தில், அதற்கு பிறகு எந்த மாதிரியான முடிவுகள் எடுக்க வேண்டும். எவ்வளவு பக்தர்களை அனுமதிக்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்படும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.பிரித்திவிராஜ், இ.ஆ.ப., காவல் துறை உதவி கண்காணிப்பாளர் திருச்செந்தூர் திரு.ஹர்ஷ்சிங், இ.கா.ப., இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி.கல்யாணி, உதவி ஆணையர் திரு.செல்வராஜ், உள்துறை கண்காணிப்பாளர் திரு.மாரிமுத்து. திருச்செந்தூர் வட்டாச்சியர் திரு.முருகேசன், திருச்செந்தூர் பேருராட்சி செயல் அலுவலர் திரு.ஆனந்தன், இந்து சமய அறநிலையத்துறை இளநிலை பொறியாளர் திரு.சந்தானகிருஷ்ணன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.